40வது மாநில அளவிலான பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகள்
2024 -2025 – திருச்சிராப்பள்ளி.

<u>அணி மேலாளர்கள் கவனத்திற்கு</u>

1. 05.12.2024 முதல் 07.12.2024 வரை மாணவிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகளும் 08.12.2024 முதல் 10.12.2024 வரை மாணவர்களுக்கான குழு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.
2. தங்கள் மாவட்டத்திலிருந்து பங்குபெறும் மாணவிகளின் வருகையை 04.12.2024 அன்று மாலை 5 மணிக்குள் மற்றும் மாணவர்களின் வருகையை 07.12.2024 அன்று மாலை 5 மணிக்குள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தங்கும் இடங்களில் கண்டிப்பாக பதிவு செய்திட அணி மேலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
3. வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்குவதற்கு தங்குமிடங்களில் தனித்தனியாக குழு ஒன்றிற்கு ரூபாய் 500 வீதம் வைப்புத் தொகை செலுத்த வேண்டும். அத்தொகை போட்டி நிறைவு நாளன்று திரும்ப வழங்கப்படும்.
4. வீரர் வீராங்கனைகள் தாங்கள் தங்கும் இடத்தினை தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் எவ்வித சேதமும் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சேதம் ஏற்படின் அணி மேலாளர்கள் முழு பொறுப்பேற்க வேண்டும். மேலும் வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.
5. வீரர், வீராங்கனைகள் தங்குமிடத்தில் அணி மேலாளர்கள் கண்டிப்பாக தங்க வேண்டும், அணி மேலாளர்களுக்கு மட்டுமே தங்கவும் உணவு உண்ணவும் அனுமதிக்கப்படுவர். அணி மேலாளர்களைத் தவிர மற்றவர்கள் கல்லூரி வளாகத்தினுள் தங்க அனுமதி இல்லை.
6. மாணவிகளுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் 04.12.2024 அன்று மாலை 6.00 மணிக்கும் மாணவர்களுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் 07.12.2024 **அன்று மாலை** 6.00 மணிக்கும் நடைபெறும். மேலும் நடுவர்களுக்கான கூட்டம் 04.12.2024 **அன்று மாலை** 7.00 மணிக்கு நடைபெறும்.
7. போட்டிகளில் பங்குபெறும் வீரர் வீராங்கனைகள் மற்றும் நடுவர்கள் தவிர மற்றவர்கள் மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
8. போட்டி நடைபெறும் காலம் குளிர்காலமாக இருப்பதால் போர்வை உட்பட தங்குவதற்குரிய உடைமைகளையும் பங்குபெறுவதற்குரிய உடைகளையும் கொண்டுவர அறிவுரை வழங்கி எடுத்து வருதல் வேண்டும். போட்டிகளில் பங்குபெற உரிய உடைகள் இருப்பின் மட்டும் பங்குபெற அனுமதிக்கப்படுவார்கள். மேலும் Lock and key கொண்டு வருதல் வேண்டும்.
9. போட்டிகளுக்கான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
10. மாணவிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் **பெண் ஆசிரியைகள்** மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.
11. மாணவர்களுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் **ஆண் ஆசிரியர்கள்** மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.
12. போட்டிகள் நடைபெறும் நாட்களில் மாணவ மாணவியர்களை வெளியில் அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
13. மாணவியர்களுக்கு 05.12.2024 அன்று காலை முதல் உணவு வழங்கப்படும். மாணவர்களுக்கு 08.12.2024 அன்று காலை முதல் உணவு வழங்கப்படும்.
14. போட்டியில் கலந்து கொள்ள வரும் அனைத்து அணியினரும் நுழைவுப்படிவம் **(Entry Form)** உடன் கொண்டுவருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

போட்டிகள் நடைபெறும் நாட்களில் விளையாட்டு மைதானம் மற்றும் தங்கும் இடங்களில் எந்தவொரு இடையூறும் ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்காண் அனைத்து தகவல்களையும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் அந்தந்த மாவட்ட அணி மேலாளர்களுக்கு விளையாட்டில் பங்கேற்கும் வீரர் வீராங்கனைகளுக்கும் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.